**செய்தி வெளியீடு எண்: 1003** **நாள்:29.12.2020**

**<u>செய்திவெளியீடு</u>**

## “மீன்வளத்துறை புத்தாக்க முயற்சிகளில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலம்”

**“மீன்வளத்துறையில் சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு மற்றும் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் நடைமுறைகள் / திட்டங்கள் / கொள்கைகளுடன் ஒப்பீடு**” குறித்த காணொலி வாயிலான கருத்தாய்வுக் கூட்டம், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் **மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின்** தலைமையில் 29.12.2020 அன்று காலை 11 மணிக்கு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, எழிலகம், சென்னை– 5ல் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர்–செயலர் திரு.அனில் மேஷ்ராம், இஆப., துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் வல்லுனர்கள் கலந்து கொண்டனர்.

செப்டம்பர் 2020–இல் நிதி ஆயோக் வெளியிட்ட சிறந்த நடைமுறைகளின் தொகுப்பின் அடிப்படையில், மீன்வளத் துறையில் சிறந்த மற்றும் புதுமையான நடைமுறைகளை முன்னிலைப்படுத்தும் காணொலிக் கருத்தரங்கு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாண்புமிகு துணைத் தலைவர் தமது துவக்க உரையில், மீன் உணவு மக்களுக்கு உயர்தர புரதம் மற்றும் ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் அடங்கிய ஒரு முக்கிய உணவு மூலமாகும் என தெரிவித்தார். வறுமையை குறைப்பதற்கும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் நிலையான மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் இன்றியமையாமையை அவர் வலியுறுத்தினார். மீன்வளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான புத்தாக்க வளர்ச்சி சார்ந்த நலத்திட்டங்கள் மற்றும் தேவையான திட்டங்களை செயல்படுத்துதல் போன்றவற்றால் தொடர்ந்து

அதிகரித்து வரும் மீன் உற்பத்தியின் மூலம் மீனவர்களுக்கு நல்ல இலாபம் கிடைப்பதுடன் நுகர்வோருக்கு தரமான மீன்கள் கிடைப்பதை உறுதிசெய்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளினால் மீன் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு 5வது இடத்தை பெற்றுள்ளது.

இக்கருத்தரங்களில் உலகளாவிய சிறந்த புதுமையான தொழிற்நுட்ப நடைமுறைகளான கடல்சார் உணவுகளைப் பாதுகாக்க திறன்மிகு குளிர்தொடர் மேலாண்மை முறைகள், நெதர்லாந்துநாட்டின் நீர்சுழற்சிமுறை அமைப்புகளில் மீன்வளர்ப்பு, செயற்கை கடற்பாறைகள், வியட்நாம் நாட்டின் கூண்டுகளில் திலேப்பியா வளர்ப்பு முறைகள், கேரள மாநிலத்தின் மீனவ சுயஉதவிக்குழுக்களைத் திரட்டுதல் மற்றும் ஆந்திரபிரதேசத்தின் மீன்வளர்ப்போர் நிறுவனம் குறித்த ஆய்வுகள், மீன்வளக்காப்பீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதை அதிகரிக்க பரிந்துரைக்கப்படும் முக்கிய சீர்திருத்தங்கள் குறித்த காட்சியொலி தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநரால் கருத்தரங்கில் விளக்கப்பட்டது.

தமிழக அரசு மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்திவரும் திட்டங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளான, மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான உலகத் தரத்திலான கட்டமைப்புகள், சுகாதாரமான கையாளுதல் மற்றும் தரமான மீன்களை வழங்க நவீன மீன் விற்பனை நிலையங்களை தொடர்ந்து ஏற்படுத்தி வருதல், தமிழ்நாடு நீர்பற்றாக்குறையுள்ள மாநிலமாக உள்ளதால், நீர்சுழற்சிமுறை அமைப்புகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்க மானியம் அளித்தல், நுகர்வோர் மின்னணு வர்த்தக வசதிகள் மூலம் எளிதில் பயன்பெறவும், மீன் உண்ணும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் 'டயல்–எ–ஃபிஷ்' மற்றும் 'மீன்கள்' போன்ற மின்னணு பயன்பாடுகளை நிறுவுதல் மற்றும் இதர சிறப்பான திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்திவருவதின் மூலம் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என மீன்வளத்துறை இயக்குநர் தனது காட்சியொலியில் தெரிவித்தார்.

மாண்புமிகு துணைத்தலைவர் தமது நிறைவுரையில், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மாதவரம் வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள, அதிநவீன தொழிற்நுட்ப திட்டங்களான ‘‘வண்ணமீன் தொழிற்நுட்ப பூங்கா அமைத்தல்’’ மற்றும் ‘‘மின்னணு தொழிற்நுட்பம் மூலம் வளர்ப்பு மீன்களின் ஆரோக்கியத்தை அறிவதற்கான தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இணையம்’’ ஆகியவற்றில் அதிநவீன தொழிற்நுட்ப வசதிகளுடன் கூடிய மீன்களுக்கான இனப்பெருக்கம் மற்றும் உயிருணவு உற்பத்தி பிரிவுகளும், மீன்களில் நோயறி மற்றும் மேலாண்மைக்கான ஆய்வகக் கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளதை பெருமிதத்துடன் விவரித்தார்.

குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் தரக்கூடிய வண்ணமீன் வளர்ப்பு தொழிலை பரவலாக்கிட மாதவரம் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது போன்று மாநிலத்தின் பிறபகுதிகளிலும் பயிற்சி அளிக்க தொழிற்நுட்ப நுட்ப பூங்காக்களை நிறுவி வண்ணமீன் வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தினால், தற்போது அலங்கார மீன்களின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கும் நம்மாநிலம் முதல் இடத்தினை அடைவது உறுதி என கூறினார். மேலும், அலங்கார மீன்களாகவும், உணவாகவும் இருவகையில் பயன்தரும் ‘பாசா’ (Basa) மீன்வளர்ப்பினை மகளிர் சுயஉதவிக் குழுவினரின் பங்கேற்புடன் சிறப்பு திட்டங்கள் வாயிலாக அரசு ஊக்குவிப்பதின் மூலம், மகளிரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தலாம் எனத்தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் இணைந்து மீன்உற்பத்தி பெருக்குவதற்கான அதிநவீன உத்திகள் குறித்த பாடத்திட்டத்தினை உருவாக்குவதின் மூலம், இத்துறைசார்ந்த மாணவர்கள் மீன் உற்பத்தியில் புதிய தொழிற்நுட்பங்களை அறிந்து அதனை தொழில் முனைவாக முன்னெடுத்து செல்ல வேண்டும் என வலியுறுத்தினார்.

இதுபோன்ற குறைந்த செலவில் அதிக வருவானம் தரக்கூடிய எளிமையான முறைகள் பற்றிய அறிவுச் செறிவினை மாநிலத்தில் கண்டறிந்து பரவலாக செயல்படுத்த விளம்பரப்படுத்தி, உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், தமிழகத்தில் மீனவர்களால் செயல்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளை நிதி ஆயோக் அமைப்பிற்கு தெரியப்படுத்துமாறு தமிழக மீன்வளத்துறைக்கு அறிவுறுத்தினார்.

உறுப்பினர் செயலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**